# கொள்கை வழி அரசு!

**தமிழ்நாடு அரசின் சார்பில் வெளிவரும் 'தமிழரசு' பத்திரிகை "மக்கள் பணியில் மகத்தான 5 ஆண்டுகள்" என்ற தலைப்பில் கடந்த ஐந்தாண்டுகளில் 'திராவிட மாடல்' அரசின் சாதனைகளை தொகுத்து மலர் வெளியிட்டுள்ளது.**

**இந்த மலரில் பல்வேறு அறிஞர் பெருமக்கள் 'திராவிட மாடல்' ஆட்சியின் சாதனைகளைப் பற்றி சிந்தனைத் திறனுடன் பல்வேறு தலைப்புகளில் கட்டுரைகள் எழுதியுள்ளனர். மேலும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள்,**

**துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மற்றும் அந்தந்தத் துறைகளின் அமைச்சர்களும் தங்களின் துறைகளின் ஐந்தாண்டு சாதனைகள் குறித்து எழுதியுள்ளனர். இக்கட்டுரைகளை எடுத்து வெளியிடுவதில் 'முரசொலி' பெருமை கொள்கிறது.**

**அதனடிப்படையில் வழக்கறிஞர் சே.மெ. மதிவதனி "கொள்கை வழி அரசு" என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையை இங்கே எடுத்து வெளியிட்டுள்ளோம்.**




**அக்கட்டுரை வருமாறு:**

அறிவுசார் கொள்கை வழி பாரம்பரியத்தின் தொடர்ச்சிதான் இன்றைய தமிழ்நாடு

கொள்கை ஆண்டுகள் ஆட்சிபுரியும் ஒரு மாநில அரசு அதன் எல்லைக்குள் நின்று அம்மாநிலத்தின் வளர்ச்சிக்காக திட்டங்களையும், சட்டங்களையும் வகுக்கும். தங்களால் இயற்றப்பட்டதிட்டங்களும், சட்டங்களும் மக்களைச் சென்றடைவதன் மூலம் அம் மாநிலத்தின் வளர்ச்சியை உறுதிசெய்து, வளர்ச்சியின் தொடர்ச்சி வேண்டுமெனில் மீண்டும் அந்த ஆட்சி அரியணை ஏற வேண்டும் என்ற வகையில் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்படும். அத்தகைய வளர்ச்சிக்கான சட்டத்திட்டங்களை இயற்றும் நேரத்தில், பெரும்பாலும் வாக்கு வங்கியை மட்டுமே மனதில் நிறுத்திச் செயல்படும் அரசுகளும் உண்டு. தற்போதையதிராவிடமாடல்ஆட்சிஇந்தச்சிந்தனையிலிருந்து சற்று வேறுபட்டு நிற்கிறது.

திராவிட மாடல் ஆட்சி என்பதைவிட திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி அமைக்கும் நேரங்களில் எல்லாம், வாக்கு வங்கிக் கணக்கை சற்று பின்னுக்குத் தள்ளி தாங்கள் ஏற்றுக்கொண்ட கொள்கையை முன்னிறுத்தியே சட்டங்களையும் திட்டங்களையும் வகுப்பார்கள். அதிலும் குறிப்பாக தமிழ் சமூகத்தின் பெரும்பான்மை மக்களாக இருக்கும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, பட்டியலின, பழங்குடியின, ஏழை எளிய மக்களின் வாழ்வில் தங்களின் திட்டங்கள் சமத்துவத்தை ஏற்படுத்தவும், அவர்களின் வாழ்வியல் மேம்பாட்டினை உறுதிசெய்ய கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதாரம் என்று அனைத்து நிலையிலும் உயரிய நிலையை அடைந்து, அதன் மூலம் அச்சமூகங்கள் தங்களின் சுயமரியாதையைத் தற்காத்துக்கொள்ளும் வண்ணம் சமூகநீதி வழியிலே நிர்வகிப்பார்கள். கொள்கை வழியில் பீடுநடை போட அரசு உறுதியேற்கும் நேரத்தில், தங்களைவிட உயர் அதிகாரத்தில் இருக்கும் ஒன்றிய அரசு நெருக்கடியைத் தரும் நிலையில் கொள்கை சமரசம் செய்துகொள்ளும் சூழல் ஏற்படுவதும் ஒரு மாநில அரசுக்கு இயல்பாக ஏற்படும் சிக்கல்தான். ஆனால், ஒன்றிய அரசு எத்தகைய நெருக்கடிகளைக் கொடுத்தாலும் கொள்கை வழியில் நிற்போம்; அதன் துணையுடன் வென்று காட்டுவோம் என்ற உறுதியுடன் வென்று காட்டி இருக்கிறார் தமிழ்நாட்டின் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்.

**கல்வி வேலை வாய்ப்புகளில் பிற்படுத்தப்பட்ட மக்களின் உரிமையை நிலைநாட்டவும், தகுதி திறமை என்று காரணங்களைக் கூறி வாய்ப்பு மறுக்கப்பட்ட அச் சமூகங்களுக்கு சமூகநீதியின் வழியாக வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்த நீதிக்கட்சியின் நீட்சியாகவும், சமத்துவம், சமூகநீதி, சுயமரியாதை, பகுத்தறிவு, மனிதநேயம் என்ற கோட்பாடுகளின் மீது கட்டி எழுப்பப்பட்ட பெரியாரியம் என்ற தத்துவத்தின் வழியிலும், மாநில சுயாட்சி, மொழி உரிமை என்ற பேரறிஞர் பெருந்தகை அண்ணாவின் உரிமைக் குரலின் தொடர்ச்சியாகவும், பெரியார் அண்ணா கொள்கைகளுக்குச் செயல்வடிவம் கொடுக்கவும், விளிம்புநிலை மனிதர்களின் வாழ்வுக்கான சமூகப் பாதுகாப்பு கேடயத்தை உருவாக்கவும் தனது ஆட்சி அதிகாரத்தை முழுமையாகப் பயன்படுத்திய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திறன்மிகு நிர்வாகத்தின் அடுத்தகட்ட பாய்ச்சலாகவும் ஒருங்கிணைந்து தமிழ் சமூகத்திற்கு கிடைத்ததற்கு அரிய வாய்ப்புதான் கொள்கை வழியில் நிமிர்ந்து நிற்கும் தமிழ்நாடு அரசின் சாதனைகள்.**

**அறிவு வறுமை நீக்கும் அரசு:**

சமூகத்தில் பொருளாதாரத்தால் ஏற்படும் வறுமை சூழலை நேரடியாக நம்மால் கண்டுகொள்ள முடியும். ஆனால், மூளைக்கு விலங்கிடும்காரியங்களை வெளிப்படையாகக்கண்டுகொள்ள வாய்ப்புகள் கிடையாது. காரணம், காலம் காலமாக இருப்பது, பழக்கவழக்கம், இதுதான் நடைமுறை என்று கூறி தமிழ் சமூகத்தில் ஏற்பட்டிருந்த அறிவு வறுமையை தமிழ்நாடு அரசு சத்தமில்லாமல் ஒழித்துக் கொண்டிருக்கிறது.



**சே.மெ.மதிவதனி**
வழக்கறிஞர்

அறிவு வறுமையை நீக்கி அனைவரும் பகுத்தறிவாளராக மாறுவதற்கான விதையை தமிழ்நாட்டில் விதைத்தவர் தந்தை பெரியார். பகுத்தறிவுடன் கூடிய கல்விதான் சமூகத்தை உயர்த்தும் என்பதில் உறுதியுடன் நின்ற பெரியார் அவர்களின் வழியில், பாடப் புத்தகம் கொடுக்கும் கல்விக்கு நிகராக வாசிப்பு பழக்கம் தமிழ் சமூகத்தை சமத்துவ சமூகமாக மலர செய்வதற்கு வாய்ப்புகளை ஏற்படுத்தும் என்ற உயரிய நோக்கில் தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் 'புத்தகக் கண்காட்சியை தமிழ்நாடு அரசு நடத்திவருகிறது.

2021 ஆம் ஆண்டு ஆட்சிப்பொறுப்பேற்றஆண்டிலிருந்து இதற்கான முயற்சிகள் தொடர்ந்து எடுக்கப்பட்டு, தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் அந்த மண்ணிற்குரிய படைப்பாளர்களை ஊக்குவிக்கும் வகையிலும், வாசிப்புப் பழக்கத்தை மாணவர்கள் இளைஞர்களிடையே அதிகப்படுத்தவும், சமூகத்தை புரிந்து கொள்ளவும் இது பயன்படும் வண்ணம் அதனை ஏற்பாடு செய்கிறார்கள். சென்னைக்கு வந்து தான் புத்தகங்களைப் பெற முடியும் என்ற நிலையை மாற்றி அந்தந்த மாவட்டங்களில் புத்தகக் கண்காட்சிக்கு செல்லும் மக்களின் எண்ணிக்கையை இதன்மூலம் உறுதிப்படுத்தி இருக்கிறார்கள்.

**சமத்துவ நோக்கில் பெயர்கள் மாற்றம்:**

இந்தியா முழுமைக்கும் ஒருவரின் பெயரை வைத்து அவர்களின் ஜாதியைக் கண்டறியும் வகையில் பெயருக்கு பின்னால் ஜாதிய பெயர் இடம் பெற்று இருக்கும். ஜாதி ஒருபோதும் அடையாளமாகாது என்பதில் உறுதியாக நின்று, தனது பெயருக்குப் பின்னால் இருந்த ஜாதிய ஒட்டை மட்டுமல்லாமல் தமிழ் சமூகத்தின் ஒட்டுமொத்த ஜாதியை ஒட்டுகளையும் துடைத்தெறிந்தார் தந்தை பெரியார். பாடப்புத்தகங்களிலும், தெருக்களிலும், விடுதிகளிலும் ஒட்டி இருந்த ஜாதிய அழுக்குகளை தனது ஆட்சியின் துணைக் கொண்டு தமிழ்நாட்டின் முதலமைச்சர் நீக்குவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார். மேலும், மிகப்பெரிய சாதனையாக ஜாதியப் பெயர் தாங்கிய விடுதிகளுக்கு சமூகநீதி விடுதிகள்' என்று பெயர் மாற்றி, இந்த அரசு சமத்துவத்திற்கான அரசு என்பதை உறுதிப்படுத்தி இருக்கிறார்.

**சொல்லிலும் செயலிலும் சுயமரியாதை:**

செயலால் மட்டுமல்ல சிந்தனையால்கூட யார் ஒருவரின் சுயமரியாதையும் பாதிப்புக்கு உள்ளாகக் கூடாது என்பதுதான் தந்தை பெரியார் முன்னிறுத்திய திராவிட தத்துவத்தின் அடிநாதம். அவ்வகையில், தான் இயற்றும் சட்டதிட்டங்களின் பெயர்கள்கூட சமூகத்தின் எல்லா ஒடுக்கு முறைகளுக்கும் ஆளாகும் பெண்களின் சுயமரியாதையை கேள்விக்குறியாக்கும் வண்ணம் இருந்துவிடக்கூடாது என்பதில் முதலமைச்சர் உறுதியாக இருக்கிறார். அதன் வெளிப்பாடு தான் 'உதவி' என்ற சொற்கள் 'உரிமையாக மாற்றப்பட்டு இருக்கிறது; சுயமரியாதை உணர்வுடன் தங்களின் வாழ்க்கையின் அடுத்த கட்டத்தை நோக்கி நகரும் பெண்களுக்கு தோழியாக விடுதிகள் காத்திருக்கிறது; கல்வி கற்று உயரப் பறந்து 'புதுமைப் பெண்களாக மாற அரசு அடித்தளம் அமைக்கிறது, ஆண்கள் மட்டுமல்ல பெண்களும் முதல்வர்கள் தான் என்பதை உறுதிப்படுத்துகிறது 'நான் முதல்வன்; சுய உதவிக் குழுக்கள் மதியுடன் நிரம்பி இருக்கின்றன; வீட்டை விட்டு பயணிக்கத் தொடங்கும் பெண்களுக்கு 'விடியல் பயணங்கள் காத்து நிற்கின்றன.

மேற்சொன்ன அனைத்தும் தமிழ் நாட்டுப் பெண்களின் சுயத்தை மீட்டெடுக்கும் திட்டங்களும் அதன் சொற்களில் அடங்கியுள்ள சுயமரியாதை உணர்வும்தான். அனைத்திலும் முத்தாய்ப்பாக இந்தியா முழுமைக்கும் பேசு பொருளாகி இருக்க வேண்டிய அதிமுக்கியத் திட்டம்தான் தனியாக வாழும் பெண்கள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், விவாகரத்தான வர்கள், குடும்பங்களில் இருந்து பிரிந்து வாழும் பெண்கள் தங்களின் உணவு உரிமையைப் பாதுகாக்க குடும்பஅட்டை பெறலாம் என்று தமிழ்நாடு அரசு 2021 ஆம் ஆண்டு ஏற்படுத்திய ஆணை.

**தங்களின் ஆவணங்களை பெறுவதற்காக ஏச்சுப் பேச்சுகளையும், அவதூறுகளையும், வன்முறை சொற்களையும் எதிர்கொண்டு வந்த பெண்கள் இனி எனக்கு அந்த நிலை தேவையில்லை, அரசு எங்களுக்கான ரேஷன் கார்டை வழங்குகிறது என்று பெருமிதத்துடன் உரக்கச் சொல்கிறார்கள். பெறப்பட்டது குடும்பஅட்டை மட்டுமல்ல; மறுதலிக்கப்பட்ட அவர்களின் சுயமரியாதையும்தான்.**

**நீங்களும் முதலாளிகள்:**

சமூகத்தின் ஏற்றத்தாழ்வுகளைக் களைவதற்கு, பொருளாதார மேம்பாடு அவசியமான கூறுகளில் ஒன்று. ஆனால் பிறப்பின் அடிப்படையில் உயர்வு தாழ்வு பேசும் ஒரு சமூகத்தில் சம வாய்ப்பும், சம அனுபவமும் மறுக்கப்படும்; எனவே அனைவருக்கும் சம வாய்ப்பும் சம அனுபவமும் கிடைக்கப்பெற்றால் தான் பொருளாதார வளர்ச்சி சாத்தியப்படும் என்ற தந்தை பெரியாரின் கொள்கையினையும், "முதலாளியின் லாபத்தைக் காக்கும் அரசு அல்ல; தொழிலாளியின் வாழ்வைக் காக்கும் அரசே மக்கள் அரசு" என்ற பேரறிஞர் பெருந்தகை அண்ணாவின் கொள்கை அரசியல் நோக்கிலும் நின்று, முதலமைச்சரின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் சமூகப் பொருளாதார மேம்பாட்டுக்கான தொழில்முனைவுத் திட்டம்' என்ற திட்டத்தை தமிழ்நாடு அரசும் முதலமைச்சரும் நிறைவேற்றி வருகின்றனர்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின சமூகத்தைச் சார்ந்தவர்கள் தங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, பொருளாதாரச் சூழலில் உயர்ந்து, அவர்களும் முதலாளிகளாக வலம் வர வேண்டும் என்ற உயரிய நோக்கில் தென்னிந்தியாவில் தமிழ்நாட்டில்தான் முதன் முறையாக 'ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் தொழில் முனைவோர் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் 2024ஆம் ஆண்டு நடைபெற்றது. இயற்கை முறையில் தயாரிக்கப்படும் உணவுப் பொருட்கள், தேநீர் தொடங்கி மின்னணுப் பொருட்கள் வரை மக்கள் அவர்களின் தயாரிப்புகளை சந்தைப்படுத்தியும், அடுத்த கட்ட ஏற்றுமதிகளுக்கு கையெழுத்திட்டும் அவர்களின் சமூக பொருளாதார மேம்பாடு உறுதி செய்யப்பட்டது.

**அனைவருக்கும் அனைத்தும் !**

அனைவருக்கும் அனைத்தும் என்ற கொள்கை வழியில் திறம்பட பயணிக்கும் தமிழ்நாடு அரசு அனைவருக்கும் சம வாய்ப்பினை ஏற்படுத்தித் தரும் நோக்கில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு செயற்கை நுண்ணறிவு (AI) குறித்து கற்றுத் தருகிறார்கள். 'நான் முதல்வன் திட்டம்' மூலம் அரசுப் பள்ளி மாணவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று பயிற்சிபெறும் வாய்ப்பையும் ஏற்படுத்துகிறார்கள். இன்னும் 20 ஆண்டுகளில் தகவல் தொழில்நுட்பம் தான் உலகத்தை ஆள இருக்கிறது என்ற தொலைநோக்குடன், தமிழ்நாட்டின் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 'கணினி அறிவியல்' பாடத்தை முத்தமிழறிஞர் கலைஞர் தனது அரசு மூலம் கொண்டுவந்து சேர்த்ததைப் போல், அடுத்த பத்தாண்டுகளில் AIதான் உலகை ஆளப்போகிறது என்ற தொலைநோக்குப் பார்வையுடன் கிராமப்புற மாணவர்களுக்கும் இதனைக் கொண்டுசேர்க்கும் முயற்சியினை தமிழ்நாடு அரசு மேற்கொள்கிறது.

**தெருக்கள் முதல் கோவில் வரை:**

ஒரு அரசு எங்கள் பாதை இதுதான் என்பதை அறுதியிட்டுக் கூறுவது எளிமையான காரியம்; அதன் வழி நடப்பதே அரிதான ஒன்று. தந்தை பெரியாரின் கொள்கை வழியில் நடப்போம் என்று உரக்கச் சொன்ன தமிழ்நாட்டின் முதலமைச்சர், தெருக்களில் நடப்பதற்கு உரிமை அற்ற சமூகங்களின் உரிமைக்காக கேரள மாநிலம் வைக்கம் வரை சென்று போராடி வெற்றி பெற்ற தந்தை பெரியாரின் நினைவினைப் போற்றும் வகையிலும், இந்த தலைமுறைக்கு மனித நேய வரலாற்றின் சுவடுகளை எடுத்து இயம்பும் வகையிலும், தீண்டாமைக்கு எதிரான உணர்வு நம்மில் ஏற்பட வேண்டும் என்ற நோக்கிலும் 'வைக்கம் நூற்றாண்டு விழாவை பல்வேறு வகைகளில் தமிழ்நாடு அரசு நடத்திக் காட்டியது. வரலாற்றில் நாம் கடந்து வந்த கொள்கைப் பாதையினை நவீனத்துவத்துடன் இன்றைய தலைமுறை புரிந்து கொள்ளும் வண்ணம் அனைத்து நிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டு, தமிழ்நாடு, கேரளம் ஆகிய மாநிலங்களில் சமத்துவ பகுத்தறிவுச் சுடர் மீண்டும் ஏற்றப்பட்டு இருக்கிறது.

தெருக்களில் நடக்க முடியாமல் இருந்த சமூகங்களை கோவில் கருவறைக்குள் அழைத்துச் செல்ல வேண்டும் என்ற தந்தை பெரியாரின் உறுதியான இலக்கையும், பெரியார் நெஞ்சில் தைத்த முள்ளை அகற்ற வேண்டும் என்ற முத்தமிழறிஞர் கலைஞரின் முன்னெடுப்பையும், ஒருசேர செய்து காட்டி இருக்கிறது திராவிட மாடல் அரசு. அன்று வைக்கம் வீதிகளில் நடப்பதற்குகூட உரிமை மறுக்கப்பட்ட சமூகங்கள் இன்றைக்கு தமிழ்நாட்டின் கோவில்களில் மந்திரம் ஓதும் நிலையை தமிழ்நாடு அரசு ஏற்படுத்தி இருக்கிறது.

**நிதி நெருக்கடி வந்தபோதும் கல்வியில் சமரசமின்மை; ஒன்றிய அரசின் மக்கள் விரோத சட்டங்களுக்கு எதிர்ப்பு, என் மக்களைக் காத்து நிற்பேன் என்று யாருக்கும் அடிபணியாத உணர்வு: இயற்றும் ஒவ்வொரு திட்டங்களிலும் சமத்துவ பகுத்தறிவுப் பார்வை; கல்வி நிலையங்களில் பகுத்தறிவு அறிவியல் சிந்தனைகளுக்கு மட்டுமே முன்னுரிமை என்ற உறுதிப்பாடு; சொல்லிலும், செயலிலும் திராவிடத்தின் அனைவருக்கும் அனைத்தும் என்ற சமூகநீதி; அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சி என்ற கொள்கை வழி அரசுதான் தமிழ்நாட்டில் நடைபெறும் திராவிட மாடல் அரசு.**

நன்றி : 'தமிழரசு'

---

## 2026 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. தலைமையிலான 2.0 ஆட்சி தொடரும்!

# கழகக் கூட்டணி வெற்றி பெற தீவிர களப்பணியாற்றுவோம்!

## திருவாரூர் மாவட்டச் செயல்வீரர்கள் கூட்டத்தில் தீர்மானம்!

*திருவாரூர், மார்ச் 20 -*

*திருவாரூர் மாவட்ட தி.மு.க. செயல்வீரர்கள் கூட்டம் அவைத்தலைவர் க.தன்ராஜ் தலைமையில் கொரடாச்சேரி கழக அலுவலகத்தில் நடைபெற்றது.*

*தீர்மானங்களை விளக்கியும், தேர்தல் பணிகள் குறித்தும் மாவட்டச் செயலாளர் பூண்டி கலைவாணன் எம்.எல்.ஏ. பேசினார்.*

*கூட்டத்திற்கு தேர்தல் பார்வையாளர்கள் திருத்துறைப்பூண்டி சட்டமன்ற தொகுதி சவுமியன் வைத்தியநாதன், மன்னார்குடி சட்டமன்றத் தொகுதி ராஜா சீனிவாசன், மாவட்ட துணைச் செயலாளர்கள் எம்.எஸ். கார்த்திக், எம்.ராமகிருஷ்ணன், சாந்தி பாஸ்கர் உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.*

*கூட்டத்தில் திருவாரூர் மாவட்டத்தில் உள்ள 1271 வாக்குச்சாவடிகளிலும் கடுமையாக தேர்தல் களப் பணியாற்றி, தலைமை அறிவிக்கும் வேட்பா ளர்களை அதிக வாக்குகள் பெற்று வெற்றி பெற செய்து, மீண்டும் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் மீண்டும் 2.0 ஆட்சி அமைக்க பாடுபடுவோம் என்று தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.*

*கூட்டத்தின் இறுதியில் நீடாமங்கலம் பேரூராட்சி தலைவர் ராமராஜ் நன்றி கூறினார்.*

*ஒன்றியக் கழகச் செயலாளர்கள் வீ.அன்பரசன், ஆர்.பாலச்சந்திரன், சேகர் கலியபெருமாள், எஸ். ஜோதிராமன், கோ. தட்சிணாமூர்த்தி, ப.பிரபாகரன், வே.மனோகரன், கேப்டன் செல்வராஜ், புலிவலம் தேவா, கே.வி.கே.ஆனந்த், நா.கவியரசு, டி.எஸ்.டி. முத்துவேல், சித்தேரி சிவா, ஐ. வி.குமரேசன்,*

*பால.ஞானவேலு, ப. பிரகாஷ், இரா.மனோகரன் நகரச் செயலாளர்கள் வீரா. கணேசன், ஆர்.எஸ். பாண்டியன், எஸ்.வி. பக்கிரிசாமி, ஏ.கே.டி. சேரன், வாரை எஸ்.ப. பிரகாஷ், நன்னிலம் பக்கிரிசாமி, பேரூர்க் கழகச் செயலாளர்கள் பா. சிவனேசன், பூண்டி கே. கலை வேந்தன், பேரளம் தியாகு உள்ளிட்டோர் பங்கேற்றனர்.*

---

## அரியலூர் மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக

# செயலாளர்கள், ஒன்றிய கழக மேற்பார்வையாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் பங்கேற்பு!

அரியலூர், மார்ச் 20 –

அரியலூர் மாவட்டக் கழக ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், ஒன்றிய கழக மேற்பார்வையாளர்கள் கூட்டம் மாவட்ட கழக அலுவலகத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசியதாவது:

எதிர் வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு கழகத்தின் ஆக்கப்பூர்வமான வளர்ச்சிப் பணிகள், தேர்தலுக்கான சிறப்பான வியூகங்கள் மற்றும் நமது திராவிட மாடல் அரசின் மகத்தான மக்கள் நலத்திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்க்கு வேண்டும் ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், அனைத்து அணி பொறுப்பாளர்கள், BLA 2, BDA, BLC உள்ளிட்ட ஒவ்வொருவரும் தங்களது பகுதியில் குறைந்தது 100 நபர்களை சந்திக்கவேண்டும், அவர்களை தினம் தினம் சந்தித்து நமது கழக அரசின் சாதனைகளை எடுத்துக் கூறவேண்டும், குறிப்பாக பெண்களுக்கு திராவிட மாடல் ஆட்சியில் கொடுக்கப்பட்ட பல திட்டங்களை எடுத்து கூற வேண்டும், அதேவேளையில் திரும்ப கழகம் ஆட்சி அமைந்தால்தான் இந்த திட்ட ங்கள், இன்னும் பல திட்டங்கள் உங்களை தேடி வரும் என எடுத்து சொல்லவேண்டும். உங்களுக்காக இன்னும் பல திட்டங்களை கொடுப்பதற்கு கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் காத்துக்கொண்டு இருக்கிறார் என கூறவேண்டும், தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அமைச்சர் பொறுப்பு ஏற்ற தினத்தில் இருந்து மகளிர் சுய உதவிக் குழுக்களின் மேல் தனி கவனம் செலுத்தி பல ஆயிரம் கோடி சுழல் நிதி கடன் வழங்கி உள்ளார், இளைஞர்களின் வாழ்வில் இன்றையதினம் விளையாட்டு மேம்பாட்டு ஆனையத்தின் மூலம் பல விளையாட்டு வீரர்களை உருவாக்கி அவர்களின் வாழ்கை தரத்தை உயர்த்தி வருகிறார் இதை எல்லாம் இளைஞர்கள் மத்தியில் அனைவரும் எடுத்து கூற வேண்டும்,

ஒவ்வொரு வாக்குச்சாவடி அளவில் மகளிரை ஒருங்கிணைத்து அவர்கள் மூலம் பொதுமக்களிடம் நமது அரசின் சாதனை திட்டங்களை கொண்டு சேர்த்து வாக்குகளை ஈர்க்கும் வகையில் கழக ஆக்கப்பணிகளைத் தீவிரப்படுத்த வேண்டும்.

மக்களின் நலன் ஒன்றையே முதன்மைக் குறிக்கோளாகக் கொண்டு உழைக்கும் நமது கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் கரங்களை வலுப்படுத்தி, மக்கள் பணியைத் தொடர்ந்து சோர்வின்றி முன்னெடுத்து, திராவிட மாடல் 2.0 ஆட்சியை அமைக்க அனைவரும் ஒன்றாக உழைப்போம் வெல்வோம் 200 படைப்போம் வரலாறு என கூறினார்.